# திருச்சியில்

## ஹிந்தி கண்டனக் கூட்டம்

## தோழர் S. S. பாரதியார் வீரமுழக்கம்.

### காங்கரஸ் ஆட்சியா? ஆரிய ஆட்சியா?

—)●(—

### தமிழர்களே ஒன்று சேருங்கள்.

(நமது நிருபர்)

திருச்சி, செப் 22,

இன்று மாலை 6 மணிக்கு திருச்சி முனிசிபல் பப்ளிக் ஹாலில் சிதம்பரம் அண்ணாமலைப்பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்கள் எம். ஏ. பி. எல். தலைமையில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைப்பதைக் கண்டிப்பதற்காக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு இந்த ஜில்லாவின் பலபாகங்களிலிருந்தும் உள்ளூரிலிருக்கும் கல்லூரி ஆசிரியர்களும், தமிழ்ப் பண்டிதர்களும்மாணவர்களும் வக்கீல்களும் உத்தியோகஸ்தர்களும்காங்கரஸ் வாதிகளும் பொது மக்களும் சுமார் 2000 பேர்கட்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் முன்னுரையாக தமிழர் நாகரிகம், தமிழ் மொழி சிறப்பு, தமிழர் வீரம், தமிழர் பெருந்தன்மை தமிழரசர்கள் ஆட்சி, ஆகியவைகளைப் பற்றி விளக்கமாகக் கூறி ஆரியர் நாகரிகம், ஆரியர் வரலாறு, ஆரியர் சூழ்ச்சி, தந்திரம், வஞ்சகம், சமஸ்கிருதம் ஹிந்தி தோன்றிய காலம், ஹிந்தியைப் பள்ளி. மாணவ மாணவிகட்கு கட்டாய பாடமாக வைப்பதால் நிகழும் தீங்கு. ஆகியவைகளைப் பற்றியும் காங்கரஸ் பெயரால் பார்ப்பனர் (ஆரியர்கள்) ஆதிக்கம் பெற்று தமிழர்கள் நாகரிகம், மானம், வீரம், மொழிவளர்ச்சி ஆகியவைகளை யொழிக்கவும் ஒடுக்கவும் துணிந்துள்ளதையும் காங்கரஸ் மந்திரிகள்-சிறப்பாக முதல் மந்திரி ஆச்சாரியாரின்எதேச்சாதிகாரத்தைப்பற்றியும் விளக்கமாகக் கூறி இந்நிலையில் தமிழர்கள் யாவரும் ஒன்றுபட்டு தமிழர்கள் இருப்பதா? இறப்பதா? என்ற முடிவில் தமிழர்கள் வாழ்ந்தால் மானத்தோடும், சுதந்தரத்தோடும், வீரத்தோடும் வாழ்வோம் என்ற உறுதியில் தமிழ் மொழியைக் காப்பாற்றி, தமிழர் ஆதிக்கத்தை நிலைநாட்டி ஆரியர் சூழ்ச்சிக்கு அடிமைப் படாமல் பல கஷ்ட நஷ்டங்களையுஞ் சகித்து ஹிந்தியைகட்டாயபாடமாக வைக்க வேண்டுமென்று செய்யும் முயற்சியை பலமாக எதிர்த்து ஒழித்தல் ஒவ்வொரு தமிழனின் கடமை என்றும் இம் முயற்சியில் தமிழ் வாலிபர்கள் தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்றும் போராட்ட இறுதியில் தமிழர்களாகிய நாம் வெற்றி பெறுவது உறுதியென்றும் பல உபமானங்களுடனும் ஆதாரங்களுடனும் சுமார் 2 மணி நேரம் பேசினார். (அவர் முழு பிரசங்கவிபரமும் பின்னர் வெளிவரலாம்.)

அதன் பின் தோழர்கள் ஈழத்துச் சிவானந்த அடிகள், எஸ். கே. தேவசிகாமணி பி. ஏ. எல்டி கி. ஆ. பெ. விசவநாதம் ஆகியவர்கள் ஹிந்தி கட்டாய பாடமாக்குவதைக் கண்டித்தும் காங்கரஸ் மந்திரிகளின் ஜனநாயகமற்ற எதேச்சாதிகாரச் செய்கைகளைக் கண்டித்தும் தமிழ்மொழி சிறப்பு,தமிழர் சிறப்பு, வீரம்,நாகரிகம் ஆதிக்கம், ஆட்சிமுறை, ஆகியவைகளைப்பற்றியும் மிகவும் நன்றாக விளக்கி விரிவாகப் பேசினார்கள்.

இறுதியில் தலைவர் முடிவுரை கூற எழுந்தபோது ஒருவர் கேள்விகளடங்கிய ஒரு துண்டுப் பிரசுரத்தை அவர்கையில்கொடுத்தார். அக்கேள்விகட்கு தனது பிரசங்கத்திலேயே பதில் இருப்பதாகவும் உபயோகமற்ற வீண் கேள்விகட்குப் பதில்கூற தேவையில்லையென்றும்கூறி அதிலுள்ள ஒன்றிரண்டு கேள்விகட்கு மட்டும் ஆணித்தரமாகப் பதில்கூறி வந்தார். அது சமயம் மற்றொருவர் "மரியாதையாகப் பேசவும்" என்று ஒரு கூச்சலை கிளப்பினார். தலைவர் எங்கட்கு மரியாதை தெரியும். வீண் கூச்சல் போட்டு கலகம் செய்ய எண்ணுவதால் என்ன பயன்? நாம் கலகத்துக்குப் பயப்படத் தேவையில்லை. வீணாகக் கலகம் செய்ய விரும்புவோர்கள் மரியாதையாக வெளியே போய்விடட்டும். தமிழர்கள் இனி எவருக்கும் அடிமையாக இருக்க விரும்ப மாட்டார்கள். வெள்ளைக்காரன் ஆட்சியிலிருந்து விடுதலை பெற விரும்புவதுபோல் பார்ப்பனர்களின் (ஆரியர்கள்) ஆட்சியிலிருந்தும் விடுதலைபெற-சுதந்தரத்துடன் வாழ விரும்புவது குற்றமா? தமிழனில் ஒரு பைத்தியக்காரன் ஹிந்தி கட்டாய பாடம் அவசியம் என்று வீண் கூச்சல் கிளப்பினால் தமிழர்களாகிய நாங்கள் எல்லோரும் பைத்தியக்காரர்களா? இனி தமிழர்களை எவரும் முன் போல் ஏமாற்றிவிடமுடியாது. தமிழர்கள் விழிப்புபெற்றுவிட்டார்கள் என்று கூறி தமிழர் ஆதிக்கம் தமிழ்மொழி வளர்ச்சி ஆகியவற்றிற்காகதமிழர்கள்யாவரும்ஒற்றுமையாக ஒரே கட்டுப்பாடாக முன் வந்து பணியாற்றவேண்டுமென்று வீரமுழக்கம் செய்தார்.

பிறகு "தமிழ் நாட்டில் தமிழ் மொழியைக் கட்டாயபாடமாகவும், இலவச பாடமாகவும் வைக்கவேண்டுமென்பதோடு ஹிந்தியைக் கட்டாய பாடமாக வைக்கச் செய்யும் முயற்சியை திருச்சிவாசிகளடங்கிய இப்பொதுக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது"

என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று.

தலைவர் முடிவுரைகூறி நன்றி தெரிவித்தார்.

தோழர் மீனாட்சி சுந்தரம் அவர்கள் தலைவர், பிரசங்கிகள், பொது மக்கள் ஆகிய யாவருக்கும் நன்றி கூறினார்.

இக்கூட்டம் இரவு 9-30 மணிக்கு இனிது முடிவு பெற்றது.